**கலேவெல பிரதேச சபை - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலேவெல பிரதேச சபையின் 2020 திசெம்பர் 31 உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் கலேவெல பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் கணனி பாடநெறிக்காக கிடைக்க வேண்டிய மொத்த பணம் ரூபா.724,500 ஆன போதும் ஆண்டில் பணமாக கிடைத்த ரூபா.455,300 மாத்திரம் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய தொற்று நிலைமை காரணமாக மத்திய நிலையத்தை மூட வேண்டி ஏற்பட்டதால் பாடநெறி கட்டணம் செலுத்துதல் தடைப்பட்டதால் இந் நிலுவை ஏற்பட்டுள்ளதாக. | கொடுக்கல் வாங்கல்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டியமை. |
| (ஆ) | சமர்ப்பித்துள்ள அட்டவணைப்படி நுகர்வு பண்டங்களின் 2020 ஜனவரி 01 திகதி ஆரம்ப மீதி ரூபா.37,259 ஆன போதும் நிதிக் கூற்றுக்களில் ரூபா.61,309 ஆக இருப்பு ரூபா.24,050 கூடுதலாக காட்டப்பபடிருந்தது. | சுட்டிக் காட்டிய தவறை ஏற்பதுடன், 2021 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது அதனை சரி செய்து கொள்வதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |
| (இ) | வைப்பு பதிவேட்டின் முன்கொண்டு வரப்பட்ட கூட்டுப் பெறுமதி ரூபா.136,765 ஆன 02 வைப்பு கணக்கு மீதிகள் மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களில் வைப்புக்களின் கீழ் காட்டப்படவில்லை. | சுட்டிக் காட்டிய குறையை ஏற்றுக்கொள்வதுடன், 2021 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது அதனை சரி செய்து கொள்வதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் சபை கட்டிட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக 03 சந்தர்ப்பங்களில் மேற்கொள்ளப்பட்ட கூட்டுத் தொகை ரூபா.572,568 மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டு கணக்கு தயாரிக்கும் போது சரி செய்து கொள்வதாக. | நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |
| (உ) | சபைக்கு சொந்தமான 82 மயானங்களிற்குரிய 116 ஏக்கர் 03 ரூட் 17 பர்சஸ் அளவான காணியை சபைக்கு சுவீகரித்து மதிப்பிட்டு குறித்த பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் காட்ட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை | சபைக்கு சுவீகரிக்க தேவையான நடவடிக்கைகள் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படுவதாக. | சொத்துக்களை இனங்கண்டு மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டியமை. |
| (ஊ) | மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய நிலுவை விளம்பர பலகை கட்டணத்தை கணக்கிட்டு கணக்குகளிற்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலவிய தொற்று நிலைமை காரணமாக இயலாது போனதுடன், 2021 ஆண்டு குறித்த விளம்பர பலகைகளிற்காக கட்டணம் அறவிடவும், கட்டணம் செலுத்தாதவரிகளின் விளம்பர பலகையை வெட்டி அகற்ற நடவடிக்கை எடுப்பதாக. | நிலுவை மீதிகளை கணக்கிட்டு நிதிக்கூற்றுக்களிற்கு உட்படுத்த வேண்டியமை. |
| (எ) | கணக்காய்விற்கு சமர்பித்த வாகன பட்டியலில் குறிப்பிட்டுள்ள போதும் நிதிக்கூற்றுக்களில் மோடார் வண்டி மற்றும் மாட்டு வண்டி அட்டவணையில் உள்ளடக்கப்படாத கூட்டுப் பெறுமதி ரூபா 46,302,939 ஆன 03 வாகனங்கள் காணப்பட்டன. | 2021 கணக்கு தயாரிக்கும் போது இதனை மோடார் வண்டி மற்றும் மாட்டு வண்டி அட்டவணைக்கு உட்படுத்தி சரிசெய்வதாக. | சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டியமை. |
| (ஏ) | காணி மற்றும் கட்டிட பதிவேட்டில் காட்டப்பட்டுள்ள கூட்டுப் பெறுமதி ரூபா.104,000 ஆன 05 காணிகள் நிதி நிலைமை கூற்றில் காணி மற்றும் கட்டிடத்தின் கீழ் காட்டப்படவில்லை. | கணக்கு தயாரிக்கையில் அப் பெறுமதி கணக்கீடு செய்யப்படாததால் எதிர்வரும் ஆண்டு கணக்கீடு செய்யவதாக. | சொத்துக்களை சரியாக இனங்கண்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்க வேண்டியமை. |
| (ஐ) | சபைக்கு சொந்தமாக இருப்பதாக உறுதிப்படுத்தப்படாத கூட்டுப் பெறுமதி ரூபா.758,300 ஆன 04 வாகன மீதிகள் மோடார் வண்டி மற்றும் மாட்டு வண்டி அட்டவணையில் உள்ளடக்கப்பட்டிருந்தன. | விடயங்களை கண்டறிந்து சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக. | சபைக்கு சொந்மான வாகனங்களை இனங்கண்டு உறுதி செய்து கொள்ள வேண்டியமை. |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்ககுகள் அல்லது அறிக்கைகள்

| விபரங்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| 03 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களின் பிரகார பெறுமதி ரூபா.69,368,001 மற்றும் அட்டவனை/அறிக்கை பிரகார பெறுமதி ரூபா.52,589,252 ஆனதில் ரூபா.16,778,749 ஆன வித்தியாசம் ஆனது. | பண்டக பதிவேட்டில் தொடர்ந்து நிலவும் நீண்ட காலமாக தீர்க்கப்படாது காணப்படும் பிரச்சினைகளை தீர்க்க குழுவொன்றை நியமித்து தற்போது செயற்படுவதாக. | வித்தியாசத்தை சீராக்கி நிதிக்கூற்றுக்களை சரியாக தயாரிக்க வேண்டியமை. |

### 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| வழங்கப்படாத கணக்காயவு சான்றுகள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| பெறுமதி ரூபா 68,115,631 ஆன 04 கணக்கு விடயங்களிற்குரிய அட்டவணை கொடுப்பனவு மற்றும் மீதி உறுதிப்பாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவிலிலை. | இங்கு குறிப்பிடப்படும் நூலக புத்தகம், அலுவலக உபகரணம், தொரகெடிவல கழிவு தொட்டி மாடி நிர்மாண செலவாகும். 2021 கணக்க தயாரிக்கையில் சரி செய்வதாக. | கணக்காய்விற்கு தேவையான தகவல்களை சமர்ப்பிக்க நடடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | சட்டங்கள் | | | |
| (i) | 1988 திசெம்பர் 17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் 1988 இன் 56 இலக்க தேசிய சுற்றாடல் (திருத்திய) சட்டம் | வியாபார அனுமதிப் பத்திரம் உரித்தான வியாபார நிறுவனங்கள் பற்றிய கணிப்பீடொன்றை மேற்கொண்டு சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 254 வியாபாரங்கள் தொடர்பாக அவ்வாறு செயற்பட்டுள்ளதா என பரிசோதிக்காது 254 வியாபார அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | சபையினால் வழங்க வேண்டிய சுற்றாடல் அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாக. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி<br>--------------------------------------- | | | |
| | 177 ஆம் விதி | ரூபா 5,000 இற்கு மேற்பட்ட அனைத்து வழங்கல்களிற்கும் டென்டர் நடைமுறை பின்பற்ற வேண்டிய போதும் மீளாய்வாண்டில் விலை மனு கோராது 02 சந்தர்ப்பங்களில் ரூபா.331,394 இற்கு பீரிஸ் கோப்பைகள் மணல் மற்றும் மெட்டல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | கணக்காய்வினால் சுட்டிக் காட்டிய குறைபாடுகளை ஏற்பதுடன் இதன் பின்னர் முறையான கொள்வனவு முறைமையூடாக விலை மனு கோரி நடவடிக்கை எடுப்பதாக. | 1988 பிரதேச சபை நிதி மற்றும் நிர்வாக விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ | இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br>--------------------------------------- | | | |
| | நிதிப் பிரமானம் 104 | மோடார் கிரேடர் இயந்திரத்திற்கு மற்றும் கொம்பெக்டர் வண்டிக்கு ஏற்பட்டிருந்த இழப்பு சபை அங்கீகாரத்தின் மீது ரூபா.91,608 இற்கு திருத்தப்பட்டிருந்தது. காப்புறுதி இழப்பீட்டை பெற நடடிக்கை எடுத்திருக்காததுடன் விசாரணை ஒன்றை மேற்கொண்டு பொறுப்புக்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு உத்தியோகத்தர்களின் இடமாற்றம் காரணமாக மீண்டும் விசாரணை குழுவை பெயரிட்டு தருமாறு உள்ளூராட்சி உதவி ஆணையாளரிற்கு கோரிக்கை விடுத்துள்ளதாக. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2016 ஆகஸ்ட் 29 ஆம் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | பதவி சீருடை படியை பெற உரிமையற்ற பதவிகளையுடைய 04 அலுவலர்களிற்கு ரூபா.16,000 ஆன சீருடை படிகள் வழங்கப்பட்டிருந்தது. | காணப்படுகின்ற ஊழியர் எண்ணிக்கை போதியளவாக இல்லாததால் இவ் ஊழியர்களை மகா சபை அங்கீகாரதின் மீது இக் கடமைகளில் இணைத்துள்ளதுடன், இப் பதவிற்குரிய வேலைகளை மேற்கொள்ள மற்றும் சரியான ஒழுங்கில் தங்கள் கடமை வேலைகளில் ஈடுபட இப் பதவி சீருடை வழங்கியுள்ளதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா.10,454,775 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை மிகைத்த வருமானம் ரூபா.15,025,348 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| **வீதவரி**<br>மீளாய்வாண்டு பில்லிடப்பட்ட வீதவரி மற்றும் குத்தகை அளவு ரூபா.1,917,413 ஆனதுடன் ஆரம்ப நிலுவை வீதவரி அளவு ரூபா.1,435,691 ஆனது. அதன் பிரகாரம் கூட்டுத் தொகை ரூபா.3,353,104 தொகையிலிருந்து மீளாய்வாண்டிற்காக ரூபா.1,748,000 அல்லது 52 சதவீதம் மாத்திரமே கிடைத்திருந்தது. மீளாய்வாண்டு இறுதியில் ரூபா.1,548,718 ஆன நிலுவை வீதவரியை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொற்று நிலைமை காரணமாக நிறுவனங்கள் மூடவேண்டி ஏற்பட்டதால் சேகரிப்பை மேற்கொள்ள முடியாது போனதாக. | 1987 இன் 15 இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் வருமானத்தை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 03 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனைச் சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நீண்ட காலமாக நிலவிவரும் இனங்காண முடியாத மீதியாக கணக்கில் காட்டியிருந்த வேலை வைப்பு ரூபா.3,406,241, பொது வைப்பு ரூபா.10,892,664, டென்டர் வைப்பு ரூபா.398,554 ஆன கூட்டுப் பெறுமதி ரூபா.14,697,459 தொகையை மீளாய்வாண்டிலும் தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீண்ட காலமாக நிலவிவரும் இனங்காண முடியாத மீதிகளை தீர்க்க தனியான குழுவொன்று நியமிக்கப்பட்டு தற்போது அப் பிரச்சினைகள் பற்றி ஆய்வு செய்து கொண்டிருப்பதாக. | மீதிகளை இனங்கண்டு தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 பெறுகைகள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வீட்டு பியச வேலைத் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா.6,283,998 ஆன கட்டிடப் பொருட்களும், கர்பிணிதாய் வேலைத் திட்டத்தின் கீழ் குழந்தைகளின் தேவைக்காக ரூபா.1,973,047 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த பண்டங்களினதும் அளவுகள் விலை மணுவில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விலை மணுவில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.5.1 வழகாட்டி ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்**

**4.1 சுற்றாடல் பிரச்சினை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | கலேவெல பிரதேச சபையினால் நடாத்திச் செல்லப்படும் கழிவுத் தொட்டியினுள் மீள்சுழற்சிக்குட்படுத்த முடியுமான கழிவுகளை பிரித்து களஞ்சியப்படுத்தியிருந்த போதும் 2020 ஆகஸ்ட் 24 திகதிய 4/1/2020 இலக்கம் கொண்ட ம.மா.ஆணையாளரின் சுற்றறிக்கை பிரகாரம் செயற்படாததால் அக் களஞ்சியங்களில் கொள்ளவை விஞ்சியிருந்த காரணத்தால் தொட்டிலின் இடைக்கிடையே இரும்பு மற்றும் அலுமினியம் கலந்த கழிவுகள் குவிக்கப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் அப்பொருட்களை குறித்த நிறுவனங்களிற்கு விற்க திட்டமிட்டுள்ளதாக. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ஆ) | இக் கழிவு தொட்டிலில் உக்கலடையும் கழிவுகளை சேகரித்து சேதன பசளை உற்பத்தி செய்யக் கூடிய வகையில் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு கட்டிடங்கள் இருக்கும் போது ஒன்று சேரும் உக்கலடையும் கழிவுகள் ஒவ்வொறு புதன் கிழமையும் தம்புள்ள கவசிமா கழிவு தொட்டிலிற்கு எடுத்து சென்று ஒப்படைக்கப்படுவதுடன் கலேவெல பிரதேச சபையினால் அதற்காக ஒரு டொன் கழிவிற்காக ரூபா.1,000 வீதம் செலுத்தப்பட்டிருந்தது. 2020 ஆண்டில் 48 டொன் கழிவுகள் அவ்வாறு ஒப்படைத்து ரூபா 48,000 செலுத்தப்பட்டிருந்தன. | இக் கருத்திட்டம் தோல்வியுற்றதால் உக்கலடையும் கழிவுகள் கவசிமா கருத்திட்டத்திற்கு அனுப்பப்படுவதாக. | தோல்வியான கருத் திட்டத்தை வெற்றிகரமாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டில் உரிய பிரமாணங்களை பூர்த்தி செய்யாது சுற்றாடல் அனுமதிப்பத்திரம் விநியோகிக்காது 31 பன்றி பண்ணைகளிற்காக வியாபார அனுமதிப் பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தன. | மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் பொது சுகாதார பரிசோதகர் அலுவலகம், விலங்கு வைத்திய அலுவலகம், பிரதேச செயலகம், கலேவெல பொலிஸ் நிலையத்துடன் இணைந்து இதற்கான தரமான வேலைத் திட்டம் ஒன்றிற்காக எதிர்காலத்தில் ஈடுபடுத்த நடவக்கை எடுப்பதாக. | சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |